# கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சிறப்பு மருத்துவப் பிரிவுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்புகள்

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

**30.கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுகாதார செவிலியருக்கான பயிற்சிப் பள்ளிக்கு புதிய விடுதிக் கட்டடம் ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

பயிற்சி செவிலியர்களின் நலன் கருதி, கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுகாதார செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கு புதிய விடுதிக் கட்டடம் ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**31. இருபத்து நான்கு அரசு மருத்துவமனைகளுக்கு புதிய டிஜிட்டல் ஊடுகதிர் (Digital X-ray) கருவிகள் ரூ.16.68 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, மதுரை உட்பட 16 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஈரோடு, தென்காசி, கோவில்பட்டி, கும்பகோணம் உட்பட 8 அரசு மருத்துவமனைகள் ஆக மொத்தம் 24 அரசு மருத்துவமனைகளுக்கு புதிய டிஜிட்டல் ஊடுகதிர் (Digital X-ray) கருவிகள் ரூ.16.68 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**32. மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், ரூ.15.43 கோடி மதிப்பீட்டில் உயர்தர ஆய்வக உபகரணங்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்**

அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஆய்வக பரிசோதனைகளின் தரத்தை மேம்படுத்தவும், உயர்தர ஆய்வக பரிசோதனைகளை

## புற்று நோய்க்கான அதிநவீன சிகிச்சை வசதிகள்!

மேற்கொள்ளவும், உயர்தர தானியங்கி ஆய்வக உபகரணங்கள் ரூ.15.43 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**33. உயர் மருத்துவ சேவைகள் வழங்க 862 மருத்துவ முகாம்கள் ரூ.12.78 கோடி செலவில் செயல்படுத்தப்படும்**

862 மருத்துவ முகாம்கள்மூலம் மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் ரூ.12.78 கோடி செலவில் வழங்கப்படும். இதனால், மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்வு உறுதி செய்யப்படும்.

**34. தமிழ்நாட்டில் வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க சோமாட்ரோகான் (Somatrogon) மருந்து ரூ.13.28 கோடி செலவில் வழங்கப்படும்**

மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களில் (District Early Intervention Centre) கண்டறியப்பட்ட வளர்ச்சிக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குத் தேவையான சோமாட்ரோகான் (Somatrogon) என்ற வாராந்திர ஹார்மோன் ஊசிகள் ரூ.13.28 கோடி செலவில் வழங்கப்படும்.

**35. மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், அனைத்து அரசு ஆய்வகங்களுக்கும் தேவையான வேதிப்பொருட்கள் ரூ.252.66 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அடிப்படை மற்றும் உயர்தர ஆய்வக பரிசோதனைகளுக்கான வேதிப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களை வழங்க ரூ.252.66 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**36.அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவிலில் 30 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவு ரூ.11.40 கோடி செலவில் மேம்படுத்தப்படும்**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கோட்டார் அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரியில் ஏற்கனவே 100 படுக்கைகள் கொண்ட பகுதி செயல்பட்டு வருகின்ற நிலையில், கூடுதலாக 30 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகளின் பிரிவு ரூ.11.40 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**37.நான்கு ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு அவசரகால சிகிச்சைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் ரூ.10 கோடி செலவில் வழங்கப்படும்**

## மருத்துவப் பல்கலைக்கழகத்தில் புதிய ஆராய்ச்சி மையங்கள்!

அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, அரசு RSRM மருத்துவமனை ஆகிய இரு மருத்துவமனைகளுக்கு தலா ரூ.3 கோடி செலவிலும் மற்றும் பெண்ணாகரம், மணப்பாறை ஆகிய 2 அரசு மருத்துவமனைகளுக்கு தலா ரூ.2 கோடி வீதம் ஆக மொத்தம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

38. கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் கூடுதல் சிறப்பு மருத்துவப் பிரிவுகள்

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், தோல் நோய் மருத்துவம், எலும்பு அறுவை சிகிச்சை, நுரையீரல் மருத்துவம் உள்ளிட்ட கூடுதல் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**39.கணினிமயமாக்கப்பட்ட வசதிகளுடன் கூடிய ஊடுகதிர் (Computed Radiography X-ray) கருவிகள் 40 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.8.91 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

ஆத்தூர், சிதம்பரம், திருச்செந்தூர், பட்டுக்கோட்டை, ஊத்தங்கரை, திருமங்கலம், சிவகாசி உட்பட 40 அரசு மருத்துவமனைகளுக்கு கணினிமயமாக்கப்பட்ட வசதிகளுடன் கூடிய ஊடுகதிர் (Computed Radiography X-ray) கருவிகள் ரூ.8.91 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**40. சேலம் உணவுப் பகுப்பாய்வகத்தில் ரூ.8.73 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வகப் பிரிவு அமைக்கப்படும்**

சேலம் மாவட்டத்திலுள்ள உணவுப் பகுப்பாய்வகத்தில் புதிய கட்டடம் கட்டி நுண்ணுயிரியல் பிரிவை ஏற்படுத்துவதன்மூலம் உணவுப் பொருட்களிலுள்ள நுண்ணுயிரிகளின் அளவினைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பான உணவு வழங்க வழிவகை செய்யப்படும்.

**41.அரசு மருத்துவமனைகளுக்கு நீராவி** சலவை மற்றும் மத்திய நுண்கிருமி நீக்கும் நிலையங்கள் (CSSD) ரூ.18.25 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு, தேவையின் அடிப்படையில் நீராவி சலவை (Steam Laundry) மற்றும் மத்திய நுண்கிருமி நீக்கும் நிலையங்கள் (Central Sterile Supply Department) ரூ.18.25 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**42.தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள விளையாட்டு மருத்துவம் மற்றும் ஆர்த்ரோஸ்கோபி துறை (Department of Sports Medicine and Arthroscopy), ரூ.7.77 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள விளையாட்டு மருத்துவம் மற்றும் ஆர்த்ரோஸ்கோபி துறையின் (Department of Sports Medicine and Arthroscopy) கட்டமைப்பு, அதிநவீன கருவிகள், தேவையான மனித வளம் ஆகியவை ரூ.7.77 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**43. தமிழ்நாட்டில் பச்சிளம் குழந்தை இறப்புகளைக் குறைப்பதற்காக 84 சிறப்பு பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளுக்கு (SNCU) உயிர்காக்கும் அதிநவீன உபகரணங்கள் ரூ.7.49 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் சிசு மரண விகிதத்தை மேலும் குறைப்பதற்கும், பச்சிளம் குழந்தை இறப்புகளைக் குறைப்பதற்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள 84 சிறப்பு பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளுக்கு (Special Newborn Care Unit) ரூ.7.49 கோடி மதிப்பீட்டில் உயிர்காக்கும் அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

**44.ரூ.7 கோடி செலவில் புதிதாக 100 யோகா மற்றும் இயற்கை மருத்துவ நலவாழ்வு மையங்கள் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 100 அரசு மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ நலவாழ்வு மையங்கள் ரூ.7 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**45 மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், 400 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான ஆய்வக உபகரணங்கள் ரூ.7.28 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின் கீழ், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆய்வகங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில், 400 Semi Auto Analyser மற்றும் 200 Cell Counter ஆகிய பகுப்பாய்வுக் கருவிகள் ரூ.7.28 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**46.எழுநூறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு தேசிய தரச்சான்று (NQAS) பெறப்படும்**

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலைங்களில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளை தரமாக வழங்க ஏதுவாக, தேசிய தரச்சான்று (NQAS) அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே 740 மையங்களுக்கு தேசிய தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டு 700 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு தேசியத் தரச்சான்று பெற ஏற்பாடு செய்யப்படும்.

**47.எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய, 50 கையடக்க ஊடுகதிர் கருவிகள் (HAND-HELD X-RAY DEVICE) ரூ.6 கோடி செலவில் அனைத்து சுகாதார மாவட்டங்களுக்கும் (HUD) வழங்கப்படும்.**

தொலைதூரப் பகுதி மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களிடையே காசநோய், நிமோனியா, எலும்பு முறிவு ஆகிய நோய்களை எளிதில் கண்டறியும் வண்ணம் எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய 50 கையடக்க ஊடுகதிர் கருவிகள் (HAND-HELD

X-RAY DEVICE) ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திற்கும் வழங்கப்படும்.

**48. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிநவீன மருந்தியல் பரிசோதனை ஆய்வகம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், அதிநவீன மருந்தியல் (Pharmocology) பரிசோதனை ஆய்வகம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**49.பத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள இந்திய மருத்துவமுறை பிரிவுகள் ரூ.5.55 கோடி செலவில் மேம்படுத்தப்படும்**

பொள்ளாச்சி, மயிலாடுதுறை, வாலாஜா, திருக்கோவிலூர், அருப்புக்கோட்டை, குளித்தலை, திருத்தணி, ஜெயங்கொண்டம், பத்மநாபபுரம், தாம்பரம் ஆகிய 10 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள இந்திய மருத்துவமுறைப் பிரிவு கட்டடம் கட்ட தலா ரூ.50 இலட்சம் வீதம் ரூ.5 கோடி செலவிலும், தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.50 இலட்சமும் மற்றும் தற்செயல் செலவினங்களுக்காக தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5.55 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**50.மூன்று அரசு மருத்துவமனைகளில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு (TAEI) மையங்கள் ரூ.5.27 கோடி செலவில்** மேம்படுத்தப்படும்

சிவகாசி, ஆரணி, உத்திரமேரூர் ஆகிய 3 அரசு மருத்துவமனைகள் TAEI மையங்களாக ரூ.5.27 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இதன்மூலம், தமிழ்நாட்டில் உள்ள TAEI மையங்களின் எண்ணிக்கை 113 ஆக உயரும்.

**51. இருபது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும் இந்தியமுறை மருத்துவப் பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.4.66 கோடி செலவில் கட்டப்படும்**

சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆக மொத்தம் 20 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும் இந்திய முறை மருத்துவப் பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.4.66 கோடி செலவில் கட்டப்படும்.

### புதிய நுண்ணுயிரியல் ஆய்வகப் பிரிவுகள்

**52.திருநெல்வேலி-பாளையங்கோட்டை மற்றும் மதுரை உணவுப் பகுப்பாய்வகங்களில் ரூ.8.2 கோடி மதிப்பீட்டில் புதிய நுண்ணுயிரியல் ஆய்வகப் பிரிவுகள் அமைக்கப்படும்**

திருநெல்வேலி-பாளையங்கோட்டை உணவுப் பகுப்பாய்வகத்தில் ரூ.4.28 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மதுரை உணவுப் பகுப்பாய்வகத்தில் ரூ.3.92 கோடி மதிப்பீட்டிலும் புதிய நுண்ணுயிரியல் ஆய்வகப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

### தீவிர தொழுநோய் கண்டறிதல் முகாம்கள்

**53.நூற்றி எட்டு வட்டாரங்களில் தீவிர தொழுநோய் கண்டறியும் முகாம்கள் ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்**

தொழுநோய் பாதிப்பால் ஏற்படும் முதல் நிலை உடல் குறைபாடு அதிகமாக கண்டறியப்பட்டுள்ள 108 வட்டாரங்களில், "தீவிர தொழுநோய் கண்டறிதல் முகாம்" இரு சுற்றுகளாக நடத்தப்படும்.

14 நாட்கள் கொண்ட ஒரு சுற்றிற்கு ரூ.2.05 கோடி என்ற அளவில், இரு சுற்றிற்கும் சேர்ந்து ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் இம்முகாம்கள் நடத்தப்படும்.

### நவீன சமையல் கூடங்கள்

**54.நான்கு அரசு மருத்துவமனைகளுக்கு நவீன சமையல் கூடங்கள் ரூ.4.00 கோடி செலவில் அமைக்கப்படும்**

கடலூர், ஈரோடு, மன்னார்குடி, உடுமலைப் பேட்டை ஆகிய 4 அரசு மருத்துவமனைகளில் ரூ.4.00 கோடி செலவில் நவீன சமையல் கூடங்கள் அமைக்கப்படும்.

**55.அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.3.90 கோடி செலவில் கூடுதல் தளம் கட்டப்படும்**

அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.3.90 கோடி செலவில் கூடுதல் தளம் கட்டப்படும்.

**56.விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைகளை மேற்கொள்ள 10 அரசு மருத்துவமனைகளுக்கு சி-ஆர்ம் கருவிகள் ரூ.3.3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில், சங்கரன்கோவில், முசிறி, சோளிங்கர், திருமங்கலம், பட்டுக்கோட்டை உட்பட 10 அரசு மருத்துவமனைகளுக்கு சி-ஆர்ம் (C-arm) கருவிகள் ரூ.3.3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

### சிறுநீரக செயலிழப்பு தடுப்பு

**57.சிறுநீரக செயலிழப்பு தடுப்பு சிகிச்சைக்காக 50 இரத்த சுத்திகரிப்புக் (Hemodialysis) கருவிகள் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகளில் நிறுவப்படும்**

சிறுநீரக செயலிழப்பு தடுப்பு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்புக் (Hemodialysis) கருவிகள் ரூ.3.25 கோடி செலவில் நிறுவப்படும்.

**58.சென்னை அரசு யுனானி மருத்துவக் கல்லூரியை மேம்படுத்த ரூ.3.15 கோடி செலவிடப்படும்**

சென்னை-அரசு யுனானி மருத்துவக் கல்லூரியை மேம்படுத்தும் விதமாக புதிய கட்டடத்திற்கு ரூ.2 கோடியும், பட்ட மேற்படிப்பு துறை தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.1.15 கோடியும், ஆக மொத்தம் ரூ.3.15 கோடி செலவிடப்படும்.

**59. பள்ளி மாணவர்கள்மூலம் ஒரு கோடி குடும்பங்களில் நோய்த் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் மாபெரும் திட்டம்**

அனைத்துப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் படிக்கும் மாணவர்களுக்கு உடல் நலம் சம்பந்தமான விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இவ்விழிப்புணர்வுத் தகவல்கள் RBSK திட்டம்மூலம், மாணவர்களுக்கும் அவர்களின் வாயிலாக பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

**60.நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 25 புதிய சிறப்பு மருத்துவ புறநோயாளி சேவைகள் (Polyclinic) தொடங்கப்படும்**

நகர்ப்புற மக்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வரும் 128 நகர்ப்புற மையங்களைப் போலவே, மேலும் 25 புதிய நகர்ப்புற சிறப்பு மருத்துவ நோயாளிகள் சேவை (Polyclinic) செயல்படுத்தப்படும். இந்த 25 மையங்களில் பொது மருத்துவம், மகப்பேறு மருத்துவம், குழந்தை மருத்துவம், பிசியோதெரபி, பல் மருத்துவம், தோல் மருத்துவம், மனநல மருத்துவம் உள்ளிட்ட சிறப்பு சேவைகள் வழங்கப்படும்.

**61.நான்கு மாவட்டங்களில் உள்ள பச்சிளம் குழந்தைகள் நிலைப்படுத்துதல் பிரிவுகளை (NBSU) ரூ.2.5 கோடி செலவில் "சிறப்புப் பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளாக" (SNCU) மேம்படுத்தப்படும்**

கரூர், விருதுநகர், தருமபுரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் குறைப்பிரசவம் மற்றும் குறைந்த எடை கொண்ட குழந்தைகளைப் பராமரிக்கவும், ஆபத்தான அறிகுறிகளுடன் பிறந்த குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கவும் நான்கு "பச்சிளம் குழந்தைகள் நிலைப்படுத்துதல் பிரிவுகளை" (New Born Stabilisation Unit) தலா ரூ.62.42 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.2.5 கோடி செலவில் சிறப்புப் பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளாக (Special Newborn Care Unit) மேம்படுத்தப்படும்.

**62.அரசு மருத்துவமனைகளில் செயல்படும் 24 இரத்த வங்கிகளுக்கு கூடுதலாக இரத்தக் கூறு சேமிப்பு அலகுகள் ரூ.2.38 கோடி செலவில் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் 24 இரத்த வங்கிகளுக்கு கூடுதலாக இரத்தக் கூறு சேமிப்பு அலகுகள் ரூ.2.38 கோடி செலவில் வழங்கப்படும்.

**63.தமிழ்நாட்டில் உள்ள 50 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.2.1 கோடி மதிப்பில் பல் ஊடுகதிர் (Dental X-ray) கருவிகள் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் பல் பரிசோதனை மற்றும் சிகிச்சையை மேம்படுத்தும் நோக்கில், 50 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் ஊடுகதிர் (Dental X-ray) கருவிகள் மொத்தம் ரூ.2.1 கோடி மதிப்பில் வழங்கப்படும். இதன்மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற மருத்துவமனைகளில் பல் தொடர்பான நோய்களை முறையாகக் கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்கப்படும்.

**64.பத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் நலப் பிரிவு ரூ.2 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்**

சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 10 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் நலப் பிரிவு ரூ.2 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

**65.தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில் முழு நேர ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.2 கோடி உதவித்தொகை ஆண்டுதோறும் வழங்கப்படும்**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் நடத்தும் மருத்துவம், பல் மருத்துவம், ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஓமியோபதி, செவிலியியல், மருந்தியல், இயன்முறை மருத்துவம், பிற மருத்துவம் சார்ந்த பட்டயப் பயிற்சிகள் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் முழு நேர ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், முழுநேர ஆராய்ச்சி மாணவர்களுக்கு

## அரசு பொது மருத்துவமனைகளில் அதிநவீன சி.டி.ஸ்கேன் கருவிகள்!

ஆராய்ச்சிக்கான உதவித் தொகையாக ரூ.2 கோடி ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**66.இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், தாய் மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகள் (MNCU) ரூ.1.81 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்**

விழுப்புரம், திருநெல்வேலி ஆகிய 2 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள பச்சிளம் குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை பிரிவுகளில் குழந்தையை, தாயுடன் அனுமதித்து கண்காணிக்கும் வகையில் 20 படுக்கைகள் கொண்ட தாய் மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகள் (Mother Newborn Care Unit) தலா ரூ.90.51 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.1.81 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**67.தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாகக் கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

வளரிளம் பருவத்தில் அதிக அளவில் கர்ப்பங்கள் நிகழ்வதைத் தடுக்கும் பொருட்டு, 10 மாவட்டங்களில் (தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், மதுரை, நாமக்கல், சேலம், தேனி மற்றும் திருவண்ணாமலை) உள்ள 24 வட்டாரங்களில் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து தெரு நாடகங்கள் உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ரூ.1.80 கோடி செலவில் நடத்தப்படும்.

**68. இந்தியமுறை மருத்துவப் பிரிவில் புதிதாக 20 இடங்களில் தசைக்கூட்டு குறைபாடு சிகிச்சை பிரிவு ரூ1.8 கோடி செலவில் உருவாக்கப்படும்**

இந்தியமுறை மருத்துவப் பிரிவில் புதிதாக 20 இடங்களில் தசைக்கூட்டு குறைபாடு சிகிச்சை பிரிவு (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி) ரூ.1.8 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**69. கருவில் வளரும் சிசுக்களுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகளை (Congenital Anomaly) மீயொலி பரிசோதனைமூலம் கண்டறிய ரூ.1.68 கோடி செலவில் அதிநவீன ஸ்கேன் கருவிகள் (Ultra Sound Machine) 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்**

விழுப்புரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தலா ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.1.68 கோடி செலவில் உயர்தர மீயொலி பரிசோதனை கருவிகள் (Ultra Sound Machine) வழங்கப்படும்.

**70. குடும்ப நல சேவைகளை வலுப்படுத்துவதற்காக, "சுய பராமரிப்புப் பெட்டகங்கள்" 8,713 துணை சுகாதார மையங்கள் மற்றும் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் வைக்கப்படும்**

குடும்ப நல சேவைகளை வலுப்படுத்துவதற்காக, 8,713 துணை சுகாதார மையங்கள் மற்றும் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்கு, சுய பராமரிப்புப் பெட்டகங்கள் வழங்கப்படும். சுய பராமரிப்புப் பெட்டகங்களில் அவசரகாலக் கருத்தடை மாத்திரைகள் மற்றும் கர்ப்பத்தினை கண்டறியும் கருவிகள் ஆகியவை கட்டணமின்றி மக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்படும்.

**71.எலும்பு, மூட்டு, தசைநார் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஆர்த்ரோஸ்கோப் கருவிகள் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.1.20 கோடி செலவில் வழங்கப்படும்**

இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ஆர்த்ரோஸ்கோப் (Arthroscope) கருவிகள் ரூ.1.20 கோடி செலவில் வழங்கப்படும்.

இதன்மூலம் எலும்பு, மூட்டு, தசைநார் காயங்களுடைய நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.

**72.தமிழ்நாடு முழுவதும் ஆரோக்கியம் மற்றும் காலநிலை மாற்றம் (One Health & Climate Change) பற்றிய தகவல் பரவல் ஏற்படுத்தப்படும்**

தமிழ்நாடு முழுவதும் ஆரோக்கியம் மற்றும் காலநிலை மாற்றம் (One Health & Climate Change) பற்றிய விழிப்புணர்வு தகவல்கள், மொத்தம் ரூ.1.18 கோடி செலவில் வழங்கப்படும்.

இந்த முயற்சியை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கு முறையாக பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்படும்.

**73.பதினொன்று புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் LED காட்சிப் பலகை ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், திருவள்ளூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் LED காட்சிப் பலகை ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

இதன்மூலம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகள், மருத்துவ மற்றும் சுகாதார விழிப்புணர்வுத் தகவல்கள் ஆகியவற்றை காட்சிப்படுத்த முடியும்.

**74.சென்னை மற்றும் பாளையங்கோட்டையில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ.1.10 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்**

சென்னை மற்றும் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்தின் வழிகாட்டு தலை பூர்த்தி செய்யும் வகையில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்திட ரூ.1.10 கோடி செலவிடப்படும்.

**75.இராணிப்பேட்டை மற்றும் ஆத்தூர் சுகாதார மாவட்டங்களில் தடுப்பூசிக் கிடங்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

இராணிப்பேட்டை மற்றும் ஆத்தூர் சுகாதார மாவட்டங்களில் நோய்த் தடுப்பு சேவைகளை வலுப்படுத்தும் வகையில் புதிய தடுப்பூசிக் கிடங்கு தலா ரூ.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**76.உணவுப் பொருட்கள் குறித்த பல்வேறு விழிப்புணர்வு தகவல்களை பொதுமக்கள் தெரிந்து கொள்ள "சமூக ஊடகப் பிரிவு" (Social Media Cell) உருவாக்கப்படும்**

சரிவிகித உணவு, உணவுப் பாதுகாப்பு விதிகள், ஒழுங்குமுறைகள், உணவுப் பொருட்கள் தொடர்பான பல்வேறு விபரங்கள் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடையே தொடந்து ஏற்படுத்திட "சமூக ஊடகப் பிரிவு" (Social Media Cell) உணவு பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் உருவாக்கப்படும்.

**77.பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டிற்குப் பதிலாக மறுசுழற்சி தன்மையுள்ள மக்கும் பொருள்களை உபயோகப்படுத்தும் உணவு நிறுவனங்களை ஊக்குவிக்க பரிசுகள் வழங்கப்படும்**

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டிற்குப் பதிலாக மறுசுழற்சி தன்மையுள்ள மக்கும் பொருள்களை உபயோகப்படுத்தி உணவுப் பொருட்களை பொட்டலமிடும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாகவும், இதன்மூலம் இதர உணவு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், அந்நிறுவனங்களை கண்டறிந்து பரிசுகள் வழங்கப்படும்.

**78.பிளாஸ்டிக் பாட்டில்கள்/கேன்களில் குடிநீரை சேகரித்து வைத்தல் மற்றும் பயன்பாடுகள் குறித்து உணவு வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

குடிநீர் பாட்டில்கள்/அதிக கொள்ளளவுக் கொண்ட குடிநீர் கேன்களை விற்பனைக்கு எடுத்து செல்லும் பொழுதும், வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தும் பொழுதும், சுகாதாரமான வழிமுறைகளை பின்பற்றுவது குறித்து உணவு வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**79.மருத்துவ ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்கான குறுகியகால மாணவர் திட்டத்தினை செயல்படுத்த உதவித் தொகையாக ஆண்டிற்கு ரூ.1 கோடி வழங்கப்படும்**

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்